# <u>பிரம்மபுத்திரா நதி புஷ்கர விழா</u>

**- பி.ஆர்.கண்ணன், நவீ மும்பாய்**

புஷ்கரத் திருவிழா ஒவ்வொரு வருடமும் குரு பகவான் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு இடம் பெயரும்போது அந்தந்த ராசிக்குரிய நதிகளில் நடைபெறும் விழாவாகும். இந்த புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடுவது மூன்றரை கோடி புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடுவதற்கு நிகரானது.

குரு பகவான் விருச்சிக ராசியில் இருந்து தனுர் ராசிக்கு இந்த வருஷம் நவம்பர் மாதத்தில் பெயரும் போது தனுர் ராசிக்கு உரிய நதியாக ஸிந்து மற்றும் பிரம்மபுத்ரா என்று இரண்டுவிதமாக வேறு வேறு கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸிந்து நதியின் ஒரு சிறிய பகுதி மட்டுமே இந்தியாவில் லதாக் பிரதேசத்தில் (அதுவும் 12000 அடி உயரத்தில்) பாய்வதாலும் பக்தர்கள் நீராட பருவ நிலையும் அப்போது ஏதுவாய் இல்லாமல் இருக்கும் காரணத்தினாலும் , பிரம்மபுத்ராவில் புஷ்கரமானது 2019 நவம்பர் 5ஆம் தேதியிலிருந்து 16ஆம் தததி வரை விசேஷமாகக் கொண்டாட ஆன்றோர்கள் ஆலோசனைப்படி முடிவு செய்யப்பட்டுள்ளது. குருப்பெயர்ச்சி தொடங்கி இந்த 12 நாட்களும் ஆதி புஷ்கரம் என்று கொண்டாடப்படுகின்றது.

**பிரம்மபுத்திராவும் குவஹாதியும்**

பாரத தேசத்தில் தொன்றுதொட்டு விளங்கும் புண்ணிய நதிகளில் ஒன்று பிரம்மபுத்திரா. இந்த நதி ஆசியாவில் இருக்கும் பெரிய நதிகளில் ஒன்று . கைலாய மலையில் பிறந்து, திபெத்தில் இமாலய பள்ளத்தாக்குகளில் தவழ்ந்து அஸ்ஸாமில் பிரம்மபுத்ரா (புஷ்கரவாஹினி) என்ற நாமத்துடன் நுழைகிறது.



திப்ருகரில் இரண்டாகப் பிரிந்து பின்னர் 100 கி.மீக்கு அப்பால் இணைந்து பின்னர் கங்கையின் கிளை நதியான பத்மாவுடன் சேர்ந்து பங்களாதேஷில் வங்காள

விரிகுடாவில் சங்கமிக்கிறது. அஸ்ஸாமில் வற்றாத மாபெரும் நதியாக இன்றும் விளங்குகிறது.

காஞ்சி காமகோடி பீடம் அஸ்ஸாம் தலைநகரான குவஹாத்தியில் விமரிசையாக பிரம்மபுத்ரா புஷ்கர விழா கொண்டாட ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். பிரம்மபுத்ரா பிரம்மதேவனின் புத்திரனாக உண்டாகிய காரணத்தால் , மற்ற நதிகளைப்போல் ஸ்திரீ நதியாக கொண்டாடப்படாமல் , புருஷ நதியாகப் போற்றப்படுகிறது. 51 சக்திபீடங்களில் அதிவிசேஷமான **காமாக்யா ஆலயம்** (யோனிபீடம்) அஸ்ஸாம் தலைநகர் குவஹாதியில் உள்ளது. காஞ்சி காமகோடி பீடம் ஏற்படுத்தியுள்ள லால்பட்டி **வினாயகர் ஆலயமும்**, **பூர்வதிருப்பதி பாலாஜி ஆலயமும் குவஹாதியில்** அமைந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துவருகின்றன. அதேபோல் காஞ்சி காமகோடி பீடத்தின் **சங்கர கண் ஆஸ்பத்திரி** பெரிய அளவில் அரிய பொதுஜன ஸேவையில் ஈடுபட்டுள்ளது.

காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் அருளாணையின்படி ஒவ்வொரு வருடமும் மகர சங்கராந்தியின் போது அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பிரம்மபுத்ராவில் இணையும் **லோஹிதா நதிக்கரையில் உள்ள பரசுராம் குண்டில்** உலகமெங்கிலிருந்தும் தவ சீலர்கள் கூடி கொண்டாடுகிறார்கள். ஸ்ரீமடத்தின் மூலம் வேத பாராயணம் , ஹோமங்கள், பூஜைகள், பஜனைகள் ஆகியன நன்கு நடத்தப்படுகின்றன. பரசுராமர் தன் தோஷங்களைப் போக்கிக்கொள்ள தவம் மேற்கொண்ட இடம் இதுவே.

**புராணப்பெருமைகள்**

பரசுராமர் தந்தையின் ஆக்ஞைப்படி , தன் அன்னையையே கொன்றதால் அவருடைய கோடாலியும் அவர் கையுடனேயே ஒட்டிக்கொள்ள , தீர்த்த யாத்திரை மேற்கொண்ட அவர் பிரம்மகுண்டத்திற்கு வந்து தவம் செய்ததாக புராணச்செய்தி . அங்கு வசித்துவந்த மக்களுக்கு நீர்வசதி செய்வதற்காக , தன் கையில் ஒட்டிக்கொண்டிருந்த கோடரியால் கரையில் இருந்த ஒரு மலையை வெட்ட , ஏரியில் இருந்து ஒரு புது நதி பிரவகித்தது . பிரம்மாவின் புதல்வனாக நீர் வடிவில் பிறந்து வளர்ந்து பிரம்மாண்ட நதியாய் பிரவகித்த நதியானதால் அது பிரம்மபுத்ரா என்று அழைக்கப்பட்டது . பரசுராமரின் சாப விமோசனத்திற்கும் இந்த நதி உறுதுணையாய் இருந்தது. மலையைப் பிளந்து நதி பிரவகிக்கும்போது கோடாலியும் அவர் கையில் இருந்து பிரிந்தது. அதன் மேல் இருந்த ரத்தமும் நீரில் கரைந்து நீர் சிவப்பானதால் இன்றும் அநேக இடங்களில் செந்நிற நீரே அந்நதியில் பிரவகிக்கின்றது.

இதே போல் பலராமரும் நிறைய அந்தணர்களைக் கொன்ற பாவம் தொலைய இந்த பிரம்மகுண்டம் வந்து தவம் செய்து , நதி லகுவாகப் பாய்ந்து செல்ல வழிசெய்து இன்னொரு உப நதியான தாளேஸ்வரியுடன் சேர வழி செய்தார் எனவும் இன்னொரு புராணக்கதை வழக்கில் உண்டு . இந்த சங்கமத்தில் நீராடுவது ஏனைய சங்கமங்களில் நீராடுவதை விட பன் மடங்கு புண்ணியம் கிடைக்கச் செய்யும்.

அஸ்ஸாமில் உள்ள தேஜ்பூர் என்ற இடத்தில் நதி ரத்த சிவப்பாய் காணப்படுவதற்கு ஒரு புராணக்கதை உள்ளது . பிரகலாதனின் வம்சத்தில் வந்த பாணாசுரன் தன் புதல்வி உஷா , கிருஷ்ணர் புதல்வனான அனிருத்தனை விவாகம் புரிய விழைந்ததை மறுத்து , தான் உபாஸித்துவரும் சிவனின் உதவியை நாட , அதன் விளைவாய் ஏற்பட்ட கிருஷ்ணர் -சிவன் இருவரும் தொடர்ந்த யுத்தத்தின்போது ஏராளமான ரத்தம் பூமியில் உறைந்ததால் அந்த பூமியே சிவப்பானதாகக் கூறப்படுகிறது.

**புஷ்கரம்**

சமீபகாலத்தில் 2015ல் ஆந்திர மாநிலம் கோதாவரிநதியிலும் , 2016ல் அங்கேயே கிருஷ்ணாவிலும், 2017ல் காவேரியிலும் , 2018ல் தாமிரபர்ணியிலும் காஞ்சி காமகோடி பீடத்தின் ஏற்பாட்டின்பேரில் அதி விமரிசையாக புஷ்கரம் கொண்டாடப்பட்டது. லக்ஷக்கணக்கான பக்த கோடிகள் கலந்துகொண்டு பெரும் புண்ணியமீட்டினர். 2019 அக்டோபர் 24 முதல் நவம்பர் 4 வரை தாமிரபரணியில் 'அந்திம புஷ்கரம்' கொண்டாடப்படவுள்ளது.

பிரம்மபுத்ரா புஷ்கரகாலத்தில் கவுஹாதியில் 5/11/19 முதல் 16/11/19 வரை நதியில் நீராடி, பின்னர் பெரும்பயன் ஈட்ட ஏதுவாகவுள்ள தீர்த்தஸ்ராத்தம் , தர்ப்பணம், நதி பூஜை, அன்னதானம், மற்றைய விசேஷ தானங்கள் முதலியவைகளுக்கு ஸ்ரீமடத்தின்மூலம் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இக்காலத்தில் தினமும் காலையில் சதுர் வேத பாராயணம் , மகா ருத்ர ஜபம் , சண்டி பாராயணம் , காம்யார்த்த ஹோமங்கள் நடைபெறும். பிறகு கலச தீர்த்தங்கள் மதியம் 12:00 மணி அளவில் பிரம்மபுத்ரா நதியில் சேர்க்கப்பட்டு புஷ்கர ஸ்நானம் நடக்கும்.
மாலையில் நதி ஆர்த்தி , விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் , லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ருத்ரக்ரம அர்ச்சனை நடைபெறும்.
காஞ்சி காமகோடி பீடத்தின் புஷ்கரகட்டம் விலாசம்:

Pushkaravahini – Brahmaputra Pushkara Venue
Sonaram High School Grounds
Assam Trunk Road
Santhipur, Bharalumukh
Guwahati – 781009